பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
187, ආඩියපාදම්පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/FRM/CIR/2013 — திகதி : 14.10.2013

மாகாண நிதிச் சுற்றுநிருப இல: PF/07/2013

மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பேரவைச் செயலாளர்,
வட மாகாணம்.

**வட மாகாண கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ அவைத் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர், கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரினதும் கௌரவ அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களினதும் மாதாந்தக் கொடுப்பனவு**

ஜனாதிபதி செயலகத்தின் PSA/P1/40 ம் இலக்கமும் 04.01.2006 ம் திகதியும் கொண்ட கடிதம் அதனோடிணைந்த சுற்றுநிருபங்கள் மற்றும் மாகாண சபைகள் சட்டம், பொது நிர்வாக, திறைசேரிச் சுற்றுநிருபங்கள் ஆகியவற்றிற்கமைவாக சபை உறுப்பினர்களினதும், அவர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களினதும் மாதாந்தக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் அறியத்தரப்படுகிறது. இதற்கமைவாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. கௌரவ மாகாண முதலமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சர்களினதும், கௌரவ அவை உறுப்பினர்களதும் சம்பளக் கொடுப்பனவு
2. கௌரவ மாகாண முதலமைச்சரினதும் கௌரவ அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களினது சம்பளக் கொடுப்பனவு
3. அலுவலக வாகனமும், மாதாந்த எரிபொருட் கொடுப்பனவும்
4. மாதாந்த தொலைபேசிக் கொடுப்புனவு
5. சபை, குழு அமர்வுக் கொடுப்பனவு
6. சாரதிகள், அலுவலகப் பணியாளரிற்கான இணைந்த படி, மேலதிக நேரக் கொடுப்பனவு

## 1. கௌரவ அமைச்சர்களினதும், கௌரவ அவை உறுப்பினர்களதும் சம்பளக் கொடுப்பனவு

1.1 கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ அவைத்தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரது சம்பளக் கொடுப்பனவுகள்

| இல | கொடுப்பனவினைப் பெறுவோர் விபரம் | மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவு (ரூபா) | உபசரணைக் கொடுப்பனவு(ரூபா) |
|---|---|---|---|
| 1 | கௌரவ முதலமைச்சர் | 64,950/= | 2,000/= |
| 2 | கௌரவ அமைச்சர்கள் | 63,500/= | 2,000/= |
| 3 | கௌரவ அவைத் தலைவர் | 63,500/= | 2,000/= |
| 4 | கௌரவ பிரதி அவைத் தலைவர் | 42,333/= | 1,000/= |
| 5 | கௌரவ உறுப்பினர்கள் | 27,145/= | - |

1.2 மேற்படி உறுப்பினர்கள் கடமையைப் பொறுப்பேற்கும் திகதியிலிருந்து இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.



பிரதி பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / ක්‍රමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப்பயிற்சி / පිරිස් හා පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதம உள்ளக கணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

## 2. அலுவலகக் கட்டடங்கள்

மாகாண அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் அலுவலகங்களை இயன்றளவுக்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் நடாத்திச் செல்ல வேண்டும். தனியார் கட்டடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெறுவதாயின் அரசாங்க மதிப்பீட்டின் படி விசேட சூழ்நிலைகளின் கீழ் மாத்திரமே அனுமதி அளிக்கப்படும்.

## 3. கௌரவ அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களினது மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவு

3.1 கௌரவ முதலமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சர்களது பிரத்தியேக உத்தியோகத்தர்களின் மாதாந்தச் கொடுப்பனவுகள் விபரம் கீழ்வருமாறு:-

| இல | அலுவலர் விபரம் | சம்பளக் குறியீடு | கௌரவ முதலமைச்சரின் பணியாட்தொகுதி | | | கௌரவ அமைச்சர்களின் பணியாட்தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் எண்ணிக்கை | உத்தியோகத்தரின் சம்பளக் கொடுப்பனவு | வாழ்க்கைச் செலவுப்படி | உத்தியோகத்தர் எண்ணிக்கை | உத்தியோகத்தரின் சம்பளக் கொடுப்பனவு | வாழ்க்கைச் செலவுப்படி |
| 1 | பிரத்தியேகச் செயலாளர் | நிலையானது | 1 | 23,000 | 6,600 | 1 | 23,000 | 6,600 |
| 2 | இணைப்புச் செயலாளர் | நிலையானது | 2 | 22,250 | 6,600 | 1 | 22,250 | 6,600 |
| 3 | ஊடகச் செயலாளர் | நிலையானது | 1 | 22,250 | 6,600 | - | - | - |
| 4 | பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் | நிலையானது | 1 | 22,250 | 6,600 | 1 | 22,250 | 6,600 |
| 5 | தனிப்பட்ட உதவியாளர் | நிலையானது | 1 | 13,990 | 6,600 | 1 | 13,990 | 6,600 |
| 6 | முகாமைத்துவ உதவியாளர் | நிலையானது | 5 | 13,990 | 6,600 | 2 | 13,990 | 6,600 |
| 7 | சாரதி | நிலையானது | 2 | 12,470 | 6,600 | 2 | 12,470 | 6,600 |
| 8 | அலுவலகப் பணியாளர் | நிலையானது | 2 | 11,730 | 6,600 | 2 | 11,730 | 6,600 |
| | | | 15 | | | 10 | | |

3.2 பிரத்தியேகச் செயலாளர்,இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோர் தொடர்புபட்ட கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள் ஆகியோர் பதவி வகிக்கும் காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவாறு தற்காலிக அடிப்படையில் பணிக்கமர்த்தப்படல் வேண்டும். அத்தகைய பதவிகளிற்கு அரச கூட்டுத்தாபனம் / நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் ஏற்கெனவே பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரை அமர்த்திக் கொள்வதாயின், குறித்த நிறுவனத்தில் அவர் பெற்றுவந்த சம்பளமன்றி அவர் இணைத்துக் கொள்ளப்பட்ட பதவிக்குரிய கொடுப்பனவுகள் அவரிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

3.3 அதே போல் மேலே 3.1 பந்தியின் இல: 5 முதல் இல: 8 வரையான பதவிகளுக்காக அமைய அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை இணைத்துக் கொள்வதாயின், அவர்கள் சொல்லப்பட்ட பதவிகளிற்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படும் தகுதிகளைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும். அவர்களின் சேவையும் தொடர்புபட்ட கௌரவ முதலமைச்சர்/கௌரவ அமைச்சர் பதவி வகிக்கும் காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறிய உதவிப் பணியாட் தொகுதியை இயன்றளவுக்கு ஏற்கனவே பணியாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களிலிருந்து தெரிவு செய்து தாபன விதிக்கோவை அத்தியாயம் V இற்கு ஏற்ப இரண்டாம்நிலை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

இவ் உத்தியோகத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்திற்கமைவாக கடமையைப் பொறுப்பேற்கும் திகதியில் இருந்து இக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஓய்வூதிய உரித்தற்ற விசேட படி, வாழ்க்கைச் செலவுப் படியினை பெறுவதற்கு உரித்துடைய அலுவலர்கள் தொடர்பில் 13.12.2012 ஆம் திகதிய 18/2012ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4. <u>அலுவலக வாகனமும், மாதாந்த எரிபொருட் கொடுப்பனவும்</u>

4.1 கௌரவ முதலமைச்சர் /கௌரவ அமைச்சரின் பாவனைக்கும், பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கும் ஒதுக்கப்படும் உத்தியோக பூர்வ வாகனங்களின் (மோட்டார் வாகனங்கள் / ஜீப் வண்டிகள் /டபுள்கப் ) ஆகக் கூடிய எண்ணிக்கையானது 03 ஆகவும், கௌரவ அவைத் தலைவரிற்கும் கௌரவ பிரதி அவைத் தலைவரிற்கும் 01 ஆகவும் அமையும்.

4.2 கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ அவைத் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர் ஆகியோரினதும், அவர்களினது பிரத்தியேகச் செயலாளர்களினதும் எரிபொருட் கொடுப்பனவு விபரம் கீழ்வருமாறு:-

| இல | வாகன எரிபொருட் கொடுப்பனவினைப் பெறுவோர் | வாகனங்கள் எண்ணிக்கை | எரிபொருட்படி(L) | |
|---|---|---|---|---|
| | | | பெற்றோல்(L) | டீசல்(L) |
| 1 | **கௌரவ முதலமைச்சர்** | | | |
| | அலுவலக வாகனம் | 2 | 1200 (இரு வாகனங்களிற்கானது) | 1000 (இரு வாகனங்களிற்கானது) |
| | பாதுகாப்பு வாகனம் | 1 | - | 500 |
| 2 | **கௌரவ அமைச்சர்கள்** | | | |
| | அலுவலக வாகனம் | 2 | 1000 (இரு வாகனங்களிற்கானது) | 800 (இரு வாகனங்களிற்கானது) |
| | பாதுகாப்பு வாகனம் | 1 | - | 500 |
| 3 | **கௌரவ அவைத் தலைவர்** | 1 | 280 (Rs.45,000/=) | 375(Rs.45,000/=) |
| 4 | **கௌரவ பிரதி அவைத் தலைவர்** | 1 | 225(Rs.36,000/=) | 300 (Rs.36,000/=) |
| 5 | **பிரத்தியேகச் செயலாளர்** | | 240 | 240 |
| 6 | **இணைப்புச் செயலாளர்** | | 218 | 218 |
| 7 | **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்** | | 218 | 218 |

4.3 மேலும் தங்களது அமைச்சினால் கௌரவ முதலமைச்சரிற்கும், கௌரவ அமைச்சர்களிற்கும் மற்றும் ஏனையோரிற்கும் வாகனங்கள் வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து எரிபொருட்கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமுடியும். கௌரவ அமைச்சர்கள் மற்றும் ஏனையவர்கள் தமது ஏற்பாட்டில் வாகனங்களை அலுவலக நோக்கங்களிற்காக பாவித்தமை தொடர்பில் அவர்களின் வெளிப்படுத்துகையின் பேரிலும் குறிப்பிட்ட கொடுப்பனவு வழங்கப்பட முடியும்.

4.4 அத்துடன், தேவையேற்படின் ஒரு வாகனத்தினை மட்டும் தமக்கு ஒதுக்கப்பட்ட வாகன எண்ணிக்கைக்கு மேற்படாத வகையில் கௌரவ முதலமைச்சர் ரூபா.150,000/=ற்குட்பட்டும், கௌரவ அமைச்சர்கள் ரூபா.75,000/=ற்குட்பட்டும் வாடகைக்கு அமர்த்த முடியும்.

5. <u>சபை, குழு அமர்வுக் கொடுப்பனவு</u>

5.1 கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ அவைத் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரது சபை, குழு அமர்வுக் கொடுப்பனவு தொடர்பாக விபரங்கள் கீழ்வருமாறு:-

| விபரம் | கௌரவ முதலமைச்சர் | கௌரவ அமைச்சர்கள் | கௌரவ அவைத் தலைவர் | கௌரவ பிரதி அவைத் தலைவர் | கௌரவ உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|---|
| சபை, குழு அமர்வுக் கொடுப்பனவு | 250/= | 250/= | 250/= | 250/= | 250/= |

5.2 குறிப்பிட்ட சபை அமர்வுக் கொடுப்பனவானது பேரவைச் செயலகத்தினால் செலுத்தப்படல் வேண்டும்.

6. <u>மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவு</u>

6.1 கௌரவ முதலமைச்சர்களின் / கௌரவ அமைச்சர்களின் உதவிப் பணியாட் தொகுதிக்கு அரசாங்க செலவில் கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்படல் ஆகாது.

6.2 கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ அவைத் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர் ஆகியோரினது வாடகை, வரி நீங்கலான தொலைபேசிக் கொடுப்பனவு விபரம் கீழ்வருமாறு:-

| இல | விபரம் | கௌரவ முதலமைச்சர் | | கௌரவ அமைச்சர்கள் | | கௌரவ அவைத் தலைவர் | கௌரவ பிரதி அவைத் தலைவர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொலைபேசி இணைப்பு | வரையறைத் தொகை(ரூபா) | தொலைபேசி இணைப்பு | வரையறைத் தொகை(ரூபா) | வரையறைத் தொகை(ரூபா) | வரையறைத் தொகை(ரூபா) |
| 1 | அலுவலகம் | 2 | 20,000 | 2 | 10,000 | 15,000 | 15,000 |
| 2 | வதிவிடம் | 2 | 10,000 | 1 | 5,000 | | |
| 3 | கையடக்கத் தொலைபேசி | 1 | 4,000 | 1 | 2,000 | | |
| 4 | தொலைநகல் | 1 | 8,000 | 1 | 7,000 | | |

6.3 கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள் ஆகியோரின் பிரத்தியேக உத்தியோகத்தர்களின் வாடகை, வரி நீங்கலான தொலைபேசிக் கொடுப்பனவு விபரம் கீழ்வருமாறு:-

| இல | விபரம் | பிரத்தியேகச் செயலாளர் | | இணைப்புச் செயலாளர் | | ஊடகச் செயலாளர் | | பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொலைபேசி இணைப்பு | வரையறைத் தொகை(ரூபா) | தொலைபேசி இணைப்பு | வரையறைத் தொகை(ரூபா) | தொலைபேசி இணைப்பு | வரையறைத் தொகை(ரூபா) | தொலைபேசி இணைப்பு | வரையறைத் தொகை(ரூபா) |
| 1 | அலுவலகம் | 1 | 1,750 | 1 | 1,500 | 1 | 1,500 | 1 | 1,500 |
| 2 | வதிவிடம் | 1 | 1,750 | 1 | 1,500 | 1 | 1,500 | 1 | 1,500 |
| 3 | கையடக்கத் தொலைபேசி | 1 | 1,750 | 1 | 1,500 | 1 | 1,500 | 1 | 1,500 |
| 4 | தொலைநகல் | 1 | 1,750 | | | 1 | 1,500 | | |

6.4 குறிப்பிட்ட தொலைபேசிக் கொடுப்பனவானது, குறிப்பிட்டவர்களிற்கென தொலைபேசி ஒழுங்கு செய்து வழங்கப்பட்டதன் அடிப்படையில் அமைச்சுக்களினால் குறிப்பிட்ட தொலைபேசிப் பாவனையைப் பொறுத்துக் கிடைக்கும் கட்டணத் தொகை, உச்ச வரையறைத் தொகையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படவேண்டும். உச்ச வரையறைத் தொகையினை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் சம்பளக் கொடுப்பனவிலிருந்து மேலதிக தொகை அறவிடப்படல் வேண்டும்.

## 7. சாரதிகள், அலுவலகப் பணியாளர்களிற்கான இணைந்தபடி, மேலதிகநேரக் கொடுப்பனவு

7.1 கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ அவைத் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர் ஆகியோரினதும் அவர்களினது பிரத்தியேகச் செயலாளர், இணைப்புச் செயலாளர், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோரினதும் சாரதிகளிற்கான இணைந்தபடிக் கொடுப்பனவும், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் கௌரவ அமைச்சர்களது அலுவலகப் பணியாளர்களிற்கான மேலதிக நேரக் கொடுப்பனவு பற்றிய வரையறை விபரம் கீழ்வருமாறு:-

| விபரம் | கௌரவ முதலமைச்சர் | கௌரவ அமைச்சர்கள் | கௌரவ அவைத் தலைவர் | கௌரவ பிரதி அவைத் தலைவர் | கௌரவ முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் | ஏனைய அமைச்சர்களின் பிரத்தியேகச் செயலாளர் | இணைப்புச் செயலாளர் | பொது சனத் தொடர்பு உத்தியோகத்தர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதமொன்றிற்கு சாரதிகளிற்கான அதிஉச்ச இணைந்தபடிக் கொடுப்பனவு நாட்கள் | 12 | 12 | 12 | 9 | 9 | 6 | 6 | 6 |
| மாதமொன்றிற்கு சாரதிகளிற்கான அதிஉச்ச மேலதிக நேரக் கொடுப்பனவு மணித்தியாலங்கள் | 200 | 200 | 200 | 125 | 125 | 100 | 100 | 100 |
| மாதமொன்றிற்கு அலுவலகப் பணியாளர்களிற்கான அதிஉச்ச மேலதிக நேரக் கொடுப்பனவு மணித்தியாலங்கள் | 60 | 60 | 60 | | | | | |

7.2 சாரதிகளிற்கான இணைந்தபடிக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும் போது வாகனநகர்வு ஓட்ட அட்டவணைப் பிரதி உறுதிப்படுத்தப்பட்டுப் பெறப்படுதல் வேண்டும்.

7.3 அலுவலகப் பணியாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்களிற்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும் போது பொதுத் தினவரவுப் பதிவேட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் பெறப்பட்டு வழங்கப்படல் வேண்டும்.

ர.விஜயலட்சுமி,
பிரதம செயலாளர்

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதி:- கௌரவ ஆளுநரின் செயலாளர், வ.மா